# காப்பியங்களில் இடம் பெறும் கடிதத் தொடர்புச் செய்திகள்

ந. ராக்கம்மாள் & முனைவர் மு.பஞ்சவர்ணம்
தமிழ்த்துறை
சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி
பள்ளத்தூர்

67

**ஆய்வுச் சுருக்கம் :**

இப்பூமியில் வாழ்கின்ற அனைத்து உயிரினங்களும் தங்களுக்குள் செய்திகளை பரிமாறிக்கொள்ளும் வகையில் ஒரு விதமான யுக்திகளை கையாளுகின்றன. மனித இனமும் தங்களுக்குள் கருத்து பரிமாறிகொள்ளுவதற்கு ஏற்றவாறு அதிக ஒலிகளை எழுப்புதல் , வரைபடங்கள் வரைதல், ஓவியம் தீட்டுதல் இப்படியாக கருத்துகளை பரிமாறிக்கொண்டன. சங்க காலம் முதல் தற்காலம் வரை கருத்து பரிமாற்றம் படிப்படியாக முன்னேற்றம் அடைந்தன. முன்பு கிளி , புறா, ஒற்றர் மூலம் தூது அனுப்பினர். இன்றைய காலகட்டத்தில் தபால் முறை அறிமுகம் செய்தனர். இலக்கியங்களிலும் தகவல் பரிமாற்றம் நடைபெற்றன காப்பியங்களிலும் இந்நிகழ்வானது நடைபெற்றன. காப்பியங்களை இரண்டாக பிரித்தனர் அவை ஐம்பெரும் காப்பியம் ஐங்சிறு காப்பியம் ஆகும். அதாவது அறம் , பொருள், இன்பம், வீடுபேறு இந்த நான்கும் இருந்தால் பெருங்காப்பியம் என்றும் இதில் ஒன்று குறைந்தால் சிறுங்காப்பியம் என்றனர். பெருங்காப்பியத்தில் முதலாவதாக இடம் பெறும் சிலப்பதிகாரத்தில் இரண்டு கடிதங்கள் உண்டு அக்கடிதத்தை எழுதுவதற்கு மாதவி எவ்வகையான பொருட்களை பயன்படுத்தினால் என்பதையும் , தன் உள் உணர்வுகளை கோவலனுக்கு வெளிபடுத்தும் விதமாக கடிதங்கள் எழுதி அதில் முத்திரையிட்டு அனுப்பினால் என்ற செய்தியும் சிலப்பதிகாரத்தில் இடம் பெறுகின்றன இதுவே ஆய்வு சுருக்கமாகும்.

**முன்னுரை:**

ஆதி மனிதன் அடர்ந்த காடுகளில் விலங்களோடு மலையில் தனியாகவும் , கூட்டமாகவும் திரிந்தான். தங்களுக்குள் கருத்துப்பரிமாற்றம் செய்ய சைகைகள் , குறியீடுகள் மற்றும் அதிக ஒலி எழுப்பி வாழ்ந்திருந்தான். நாளடைவில் கற்களைக்கொண்டு கோட்டோவியம் வரைந்தான். தங்களுக்குள் நிகழும் , இன்பம் - துன்பத்திற்கு ஏற்றவாறு முகபாவனைகளையும் , சைகைகளையும் மாற்றினான். பின்னர் கூட்டம் கூட்டமாகவும், ஒரு சமுதாயமாக சேர்ந்து வாழ்ந்தான். இங்கு நிலவக்கூடிய நிலப்பரப்பிற்கு ஏற்றவாறு அங்கும், இங்குமாக ஒரு கூட்டமாகவும் , சமுதாயமாகவும் வாழ்ந்தார்கள். ஒவ்வொரு சூழலுக்கும் ஏற்றவாறு மக்களின் பண்பாடு , கலச்சாரம், மொழி இனம் வாழ்க்கை முறை மாறின. சங்க காலத்தில் செய்திகளை அனுப்புவதற்கு ஓலைகள் , ஒற்றர், கிளி, புறா, நிலா, பாட்டு இவற்றின் மூலம் செய்திகள் அனுப்பப்பட்டன. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை , பத்துப்பாட்டில் எண்ணற்ற பாடல்கள் உள்ளன. இவையனைத்தும் ஓலைச்சுவடியில் எழுதப்பட்டன. பின்னர் நூல்களாகத் தொடுக்கப்பெற்றன. சங்க மருவிய காலம் , நீதி நூல்கள் தோன்றின. பின்னர் காப்பியங்கள் தோன்றின. இவற்றை ஐம்பெருங்காப்பியம் , ஐச்சிறுகாப்பியம் என பிரிக்கலாம். இவற்றில் எழுத்தாணிப் பற்றியும் , எழுதும் மை எவ்வாறு தயாரிக்கப்பட்டன என்பதனையும், செய்திகளை எவ்வாறு பரிமாறிக் கொண்டான் என்பதனையும் இக்கட்டுரையின் வழிநின்று தெளிவாக அறியலாம்.

**காப்பியங்களில் செய்தி தொடர்பு :**

காப்பியம் என்பது மிக நீண்ட நெடிய பாடல் அடிகளை கொண்டவை இதனை

“பாவிகம் என்பது காப்பிய பண்பே”[1]

(தண்டி - நூற்பா – 91 )

என்கின்ற தண்டியலங்காரம் பாவிகம் என்றுச் சொல்லப்படுவது காப்பியமாகிய தொடர்நிலைச்செய்யுளில் கவிஞரால் கருதிச் சொல்லப்படுவது ஆகும். காப்பியத்தை பெருங்காப்பியம் சிறுங்காப்பியம் என இரு வகையாக பிரிப்பர். அறம் , பொருள், இன்பம், வீடுபேறு இவற்றில் ஒன்றும் குறையாமல் இருந்தால் பெரும்காப்பியம் நால்வகைப் பொருட்களில் ஏதேனும் ஒன்று குறைந்து வந்தால் அவை ஐச்சிறுகாப்பியம் ஆகும். ஐம்பெருங்காப்பியமாக , 1) சிலப்பதிகாரம், 2) மணிமேகலை, 3) சீவக சிந்தாமணி, 4) வளையாபதி, 5) குண்டலகேசி சிலப்பதிகாரத்தில் இரண்டு கடிதங்கள் உண்டு காப்பிய தலைவன் காப்பிய தலைவி மற்றும் அதில் இடம் பெறும் கதை மாந்தர்களுக்குள் செய்திகளை பரிமாறிக்கொள்வார்கள். இவ்வாறாக ஒற்றர் , தூதர், ஓலைகள் மூலமும் பெண்கள் தான் அணிந்திருந்த அணிகளன்கள் மூலமும் சில நேரங்களில் செய்திகளை தூதாக அனுப்புவர். எல்லாக காப்பியங்களிலும் செய்திகள் பரிமாறிக்கொள்ளும் முறைகள் உள்ளன.

**மாதவி திருமுகம் அனுப்புதல் :**

சிலப்பதிகாரம் கடிதம் எழுதும் முறையையும் , கடிதச் செய்தியையும் ஒருவரின் வழியாகக் கொடுத்து அனுப்பிய முறைப்பற்றியும் கூறுகின்றது. கோவலனுக்கு இரண்டு முறை கடிதம் மாதவி எழுதியுள்ளார். முதல் கடிதம் காதல் கடிதம் அதனை வயந்தமாலையிடமும் , இரண்டாவதாக மன்னிப்புக் கடிதத்தை மாயோன் மறையோனிடமும் கொடுத்து அனுப்புகின்றாள். முதல் கடிதத்தை எழுதும்பொழுது எழுதுவதற்கு எவ்வகையான பொருட்களை பயன்படுத்துகிறாள் என்று சிலம்பு கூறுகிறது.

இதனை

**“சண்பகம், மாதவி, தமாலம், கருமுகை,**
**வெண்பூ மல்லிகை, வேரொரு மிடைந்த**
**அம்செங் கழுநீர் ஆய் இதழ்க் கத்திகை**
**எதிர்பூந் செவ்வி இடைநிலத்து யாத்த**
**முதிர்பூந் தாழை முடங்கல் வெண் தோட்டு?**
**விரைமலர் வாளியின் வியல்நிலம் ஆண்ட**
**ஒருதனிச் செங்கோல் ஒருமகன் ஆணையின்**
**ஒருமுகம் அன்றி, உலகு தொழுது இறைஞ்சும்**
**திருமுகம் போக்குஞ் செவ்வியள் ஆகி**
**அலத்தகக் கொழுஞ்சோறு அளைஇ, அயலது**
**பித்திகைக் கொழுமுகை ஆனி கைக்கொண்டு” [2]**

புகார் காண்டம் (வேனிற் காதை – 45 – 56 )

என்கின்றார்.

கோவலனுக்கு மாதவி மடல் எழுதும்பொழுது எண்ணற்ற சண்பகம் , தமாலம், கருமுகை, வெண்பூ, மல்லிகை, வெட்டிவேர், செங்கழுநீர், மெல்லிதழ்கள் இவற்றால் தொடுக்கப்பட்ட பூவினை தன் தலையில் வைத்து மாலைப்பொழுதில் அமர்ந்திருக்கிறாள். இளங்காற்று வீசும் பொழுது மலரின் மனமும் பரவுகிறது. கோவலன் நினைவு வருகிறது. உடனே தன் தலையில் வைத்திருந்த முதிர்ந்த தாழம்பூவினது முடக்கத்தையுடைய வெண்மையான இதழிலே , அதற்கு அருகில் இருக்கும் பித்திகையின் கொழுவிய முகையை எழுதானியாகக் கையிற்கொண்டு , அதனைச் செம்பஞ்சுக் குழம்பிலே தோய்த்துத் தோய்த்து எழுதினால் இவ்வாறாக தனது எண்ணத்தினை கோவலனுக்கு வெளிப்படுத்தினாள்.

மேலும், “அணித்தோட்டு திருமுகம் ” என்ற வார்த்தையினை பயன்படுத்துகிறார். இதில் திருமுகம் என்பது மாதவியின் முகம் , தோட்டு – தோடு – அணிவது ஒரு வகையான புல்லை குறிக்கும் , இதே போன்று தொல்காப்பியரும் “புல்” பயன்படுத்தியுள்ளார்.

இதனை,

**"தோடே மடலே யோலை யென்றா(ய்)**
**ஏடே யிதழே பாளை யென்றா**
**ஈர்க்கே குலையென நேர்ந்தன பிறவும்,**
**புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்"[3]**

(தொல் - மரபியல் நூற்பா- 88)

என்கிறார் தொல்காப்பியர்.

உயிரினங்களை பொதுவாக ஆறு வகையாக பிரிக்கின்றார் தொல்காப்பியர். ஓரறிவு என்பது புல் , அதாவது தோடே மடனே யோலை. காய்ந்த சருகு போன்ற ஓலையில் மாதவி கோவலனுக்கு முதல் காதல் கடிதம் எழுதினான்.

**மாதவியின் மன்னிப்புக் கடிதம் :**

கோவலன் தன்னை தவறாகப் புரிந்துகொண்டார் என்று எண்ணி தன்னை மண்ணிக்குமாறு ஒரு கடிதத்தை வரைந்தாள். அக்கடிதம் மன்னிப்பு கடிதம் ஆகும். இக்கடிதம் மிக முக்கியமான கடிதம் ஆகும்.

இதனை

**"மண்உடை முடங்கல் மாதவி ஈத்ததும்,**
**ஈத்த ஓலை கொண்டு இடைநெறித்திரிந்து**
**தீத்திறம் புரிந்தோன் சென்ற தேயமும்,**
**வழிமருங்கு இருந்து மாசுஅற உரைத்து – ஆங்கு**
**அழிவுடை உள்ளத்து ஆர்அஞர் ஆட்டி**
**போது அவிழ் புரிநிழல் பூங்கொடி நாங்கை**
**முhதவி ஓலை மலர்க்கையின் நீட்ட" [4]**

**(மதுரைக் காண்டம் புறஞ்சேரி இறுத்தகாதை 73-80)**

என்கின்றாள் மாதவி வயந்த மாலையின் மூலம் இக்கடிதத்தை அனுப்பினாள். மண் இலச்சினை இட்டுக் கொடுத்தால், மாதவி தன்னை மன்னிக்குமாறு தன் எண்ணத்தை ஒரு ஓலையில் எழுதி அதனைச் சுருட்டி இலச்சினை (முத்திரை) பதித்துக் கொடுத்து அனுப்பினால். முத்திரையிட்டிருந்தால் அந்த மடலை யாரும் பிரித்து பார்க்கக் கூடாது. மடல் யாருக்கு அனுப்பட்டிருக்கோ. அவர்கள்தான் பிரித்து படிக்க வேண்டும் , இதிலிருந்து அக்கால கட்டத்திலும் முத்திரையிடும் பழக்கம் வழக்கத்திலிருக்கின்றன என்பதை அறியலாம்.

**கோவலன் ஓலையை பெறுதல் :**

மாதவியின் கடிதத்தை பார்த்தவுடன் பெற்றான்.

இதனை

**"உடன்உறை காலத்து உரைத்த நெய் வாசம்**
**குறுநெறிக் கூந்தல் மண்பொறி உணர்த்திக்**
**காட்டியது, ஆதலின் கைவிட லீயான்;**
**ஏட்டுஅகம் விரித்து ஆங்கு எய்தின உணர்வோன்"[5]**

**மதுரைக்காண்டம் புறஞ்சேரி இறுத்தகாதை (80-85)**

மாதவியுடன் கூடியிருந்த கால கட்டத்தில் அவளின் கூந்தலில் நெய் வாசனையை உணர்ந்தான். அக்கடிதத்தை வேண்டாம் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றவில்லை , அக்கடிதத்தில் மண் முத்திரை

பொறிக்கப்பட்டிருந்தது, அக்கடிதத்தை பிரித்து படிக்கத் தொடங்கினான். இவ்வாறாக அக்காலக்கட்டத்தில் கடித போக்குவரத்து இருந்தது என்பதையும் , அதற்கு முத்திரை பொறிக்கப் பட்டிருப்பதையும் அறிய முடிகின்றது.

**தொகுப்புரை:**

இன்றைய காலகட்டத்தில் செய்திகளை பரிமாறுவதற்கு அறிவியல் தொழில்நுட்பத்தின் காரணமாக செய்திகள் கண்இமைக்கும் நேரத்தில் சென்றடைகின்றன. ஆனால் அக்காலகட்டத்தில் செய்திகள் சென்றடைய கால தாமதம் ஆகும். இருப்பினும் சங்க இலக்கியத்திலும் காப்பியத்திலும் ஒற்றர் , தூதர், ஓலை, அணிகலங்கள், பாட்டு இவற்றின் மூலமும் செய்திகள் பரிமாறிகொள்ளப்பட்டன. சிலப்பதிகாரத்தில் இரண்டு கடிதங்கள் மாதவி எழுதுகிறாள் முதல் கடிதம் காதல் கடிதம் இரண்டாவது கடிதம் மன்னிப்பு கடிதம் எழுதி முத்திரையிட்டு அனுப்புகிறாள். இக்காலகட்டத்திலும் முத்திரையிடும் பழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளன. நம்நாட்டில் இந்திய தபால் தந்தி முறையில் நாம் எழுதி அனுப்பக்கூடிய அனைத்து கடிதத்திலும் இந்திய முத்திரை பதித்து அனுப்புகின்றனர். இதுவே காப்பியங்களில் செய்தித் தொடர்பாகும்.

**அடிக்குறிப்புகள் :-**

1. சுப்ரமணிய தேசிகர் தண்டியலங்காரம் நூற்பா - 91
2. அடியார்க்கு நல்லார் உரை சிலப்பதிகாரம்
   (வேனிற்காதை பாடல் வரி 45 – 56)
3. இளம்பூரணார் தொல்காப்பியம் மரபியல் நூற்பா 91
4. அடியார்க்கு நல்லார் உரை சிலப்பதிகாரம்
   (புறஞ்சேரி இருத்தற்காதை பாடல் 73 – 80)
5. அடியார்க்கு நல்லார் உரை சிலப்பதிகாரம்
   (புறஞ்சேரி இருத்தற்காதை பாடல் 80 – 85)